

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.4.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ஹர் சஹாய் மீனா, அறிவியல் நகர துணைத் தலைவர் / முதன்மைச் செயலாளர் தேவ் ராஜ் தேவ், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஜெ.இன்னசன்ட் திவ்யா, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் துணை தலைவர் எம்.பி. விஜயகுமார், (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.4.2025) தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் க. அன்பழகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம் மற்றும் கும்பகோணம் பகுதி நிர்வாகிகள் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.4.2025) தலைமைச் செயலகத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் க.அன்பழகன், துரை சந்திரசேகர், டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணா துரை ஆகியோர் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.4.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் 2025–2026 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### சமயபுரம் பகுதிக்குத் தேவையான குடிநீர் வழங்க

# ரூ.11.50 கோடியில் விரைவில் புதிய திட்டப் பணி தொடக்கம்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு பதில்!

சென்னை, ஏப். 26–

சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதில் வருமாறு:–

**சீ. கதிரவன் :** (அ) மண்ணச்சநல்லூர் தொகுதி, ஈச்சம்பட்டியில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் கே.என். நேரு:** மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இனாம்கல்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த ஈச்சம்பட்டி குடியிருப்பில் உள்ள வடக்கு ஈச்சம்பட்டி, தெற்கு ஈச்சம்பட்டி, மற்றும் மேற்கு ஈச்சம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் என்ற திட்ட வடிவமைப்பின்படி 1 இலட்சத்து 40 ஆயிரம் லிட்டர் குடிநீர் இருங்களூர் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது, Jal Jeevan Mission திட்டத்தில், இந்தக் கூட்டுக்



குடிநீர் திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு ஈச்சம்பட்டி குடியிருப்பில் உள்ள வடக்கு ஈச்சம்பட்டி, தெற்கு ஈச்சம்பட்டி, மேற்கு ஈச்சம்பட்டி, ஜாலி நகர் மற்றும் சக்தி நகர், விக்னேஷ் அவென்யூ ஆகியப் பகுதிகளிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் திட்ட வடிவமைப்பின்படி 2 இலட்சத்து 64 ஆயிரம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் ஈச்சம்பட்டி குடியி ருப்பில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் முழுமையாக காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**சீ. கதிரவன்:** எனது மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், சாக்கநல்லூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், இன்னிலையில் பேரூராட்சிக்குத் தேவைப்படும் கூடுதல் குடிநீரை வழங்க நமது திராவிட மாடல் அரசு முன்வருமா என கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** சமயபுரம் கண்ணனூர், அந்தப் பகுதி சமயபுரத்தைச் சேர்ந்தது ஒரு நாளொன்றுக்கு சராசரியாக இலட்சம் மக்கள் கோயிலுக்கு வந்துச் செல்கிறார்கள். எனவே, குடிநீர் அங்கு அவசியம். அங்கு வந்திருக்கிற பொதுமக்களுக்குக் குடிநீர் தேவையிருக்கிறக் காரணத்தால், இந்த ஆண்டு ஒரு ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் புதிய திட்ட அமைப்பு ஏற்பாடுச் செய்யப்பட்டிருக்கிறது. விரைவிலே பணித் தொடங்கி சமயபுரம் முழுமையாக தேவையான அளவிற்கு ஒரு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் தண்ணீர் அவர்களுக்கு வழங்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகிறது. விரைவிலே tender போகப்போகிறோம்.

**வி.பி. நாகைமாலி:** நாகப்பட்டினம் மாவட்டத்தில் Jal Jeevan திட்டத்தின்கீழ் பதிக்கக்கூடிய அந்தக் குழாய்ப்பதிக்கின்றப் பணி மிகவும் மந்தமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதை விரைந்து முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** நாகப்பட்டினம் கூட்டுக் குடிநீர் திட்டம் என்பது ஒரு ரூ.1,6001,700 கோடி செலவிலே நடைப்பெற்று வருகிறது. இடையிலே, அந்தத் தண்ணீர் எடுக்கின்ற இடத்திலே விவசாயிகள் பிரச்சினை செய்தக் காரணத்தால், 2 மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை வைத்து சமரசம் செய்து, இப்பொழுது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பணி விரைவிலே, எங்களுக்குச் சொன்னது ஒரு 3 மாத காலத்திற்குள்ளாக முடித்துத் தண்ணீர் கொடுத்து விடலாம் என்றுச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதை கவனத்தில் கொண்டு, அதிகாரிகளுடன் கலந்து விரைவாக முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**ஏ.பி. நந்தகுமார்:** வேலூர் மாவட்டம் வெயிலூர் மாவட்டம், வெயிலூர் மாவட்டத்திற்கு குடி தண்ணீர் பிரச்சினையை, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதல மைச்சராக இருந்த பொழுது, காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தை கொண்டு வந்து வேலூர் மாவட்ட மக்களுக்குத் தந்தார்கள். இப்பொழுது, என்னுடைய அணைக்கட்டு தொகுதியிலிருக்கக்கூடிய கிராமங்களுக்கு, இந்த காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் வந்தால் மட்டுமே குடிப்பதற்கு நல்ல நீர் வரும். ஆகவே அமைச்சர் அவர்கள் அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட அந்த காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்தி கிராமங்க ளுக்கு வழங்குவார்களா என்பதை அறிந்து,

ஏனென்றால், main ஆக, ஐயா pipeline போவதே எங்கள் பள்ளிகொண்டான், எங்கள் ஊரைத் தாண்டிதான் போகிறது.

பள்ளிகொண்டான், விரிஞ்சிபுரம் போன்ற பகுதிகளைத் தாண்டி செல்லக்கூடிய அந்தத் தண்ணீரை பக்கத்தில் 2 கி.மீ. தூரத்தி லுள்ள கிராமங்களுக்கு குடிநீர் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, அந்தக் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது நானும் சட்டமன்றத்தில் இருந்தேன். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டபோது, வேலூர் மாவட்டம் அத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு, நம்முடைய முதலமைச்சர் அவர்களால் 1,100 கோடி ரூபாய் செலவில் அத்திட்டம் நிறைவே ற்றப்பட்டது. பள்ளிகொண்டான் பகுதியிலிருந்து செல்கின்ற குழாய் மெயின் குழாயாகும். அதிலிருந்து தண்ணீர் எடுத்துவிட்டால், அதற்குப் பிறகு அங்கிருந்து 18 கி.மீ. தூரம் வேலூர் நகரத்திற்குள் தண்ணீர் வர வேண்டும். மெயின் குழாயிலிருந்து தண்ணீர் எடுக்கும்போது ஏதாவது தடங்கல் ஏற்பட்டுவிட்டால், முழுமையாக தண்ணீர் செல்வதே நின்றுவிடும். எனவே, உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதி என்று எழுதிக் கொடுப்பார்களேயானால், அந்தப் பக்கம் வருகிற sub குழாய்களிலிருந்து தண்ணீர் கொடுக்க முடியுமா? வேலூருக்குத் தேவையான தண்ணீர் இருக்கிறதா? கூடுதலாக தண்ணீர் இருக்கிறதா? தண்ணீரை பம்ப் செய்ய முடியுமா? என்பதையெல்லாம் ஆராய்ந்து, உறுப்பினர் அவர்கள் கூறியதைக் கவனத்தில் கொண்டு, அதை எப்படி செயல்படுத்தலாம் என்பது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்துபேசி, செய்ய வாய்ப்பிருந்தால் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அறந்தாங்கி அம்பிகாபதி
### ஏப்ரல் 26 (2008)



**புதுக்கோட்டை மாவட்ட துணைச் செயலாளராகவும் – மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**பூவளூர் ஊராட்சி மன்றத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**நெருக்கடி கால 'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அழகிய உருவம்! அமைதியின் வடிவம்!



கல்லுமே கரையு மே!உன்
கலைமுகம் கண்டால்! அச்சு
வெல்லமே உன்ப டைப்பு!
வெல்லுமே பகையை! வெள்ளை
முல்லையின் உள்ள மே!நம்
முத்தமிழ் அறிஞ ருக்குச்
செல்லமே! செல்வ மே! நீ
சென்றதேன் எம்மை விட்டே?

உரைநடை எழுத்துச் செல்வம்!
உயர்தரக் கருத்துச் செல்வம்!
தருவாகிப் பயன்வி ளைக்கும்
தமிழ்ச்செல்வம்! தாய்வ யிற்றில்
கருவான அறிவுச் செல்வம்!
கழகத்தின் கொள்கைச் செல்வம்!
திருவாரூர் கொடைய ளித்தத்
திராவிடச் செல்வம் நீதான்!

சத்தியம் உனது செல்வம்!
சமத்துவம் உனது செல்வம்!
முத்தமிழ் உனது செல்வம்!
"முரசொலி" உனது செல்வம்!
பத்தரை மாற்றுப் பொன்போல்
பண்பில்நீ உயர்ந்த செல்வம்!
சித்தத்தில் கலந்த எங்கள்
செல்வத்துட் செல்வம் நீதான்!

கல்வியிற் சிறந்த செல்வம்!
கட்டுரை வரைந்த செல்வம்!
சொல்வளம் மிகுந்த செல்வம்!
சுயமரி யாதைச் செல்வம்!
நெல்வயல் போலும் ஆற்றல்
நிறைந்தநற் செல்வம்! எங்கள்
"செல்வியின் செல்வ மான
செல்வமே" சென்ற தெங்கே?

முழுநிலா வெளிச்சக் கண்கள்
மூடிற்றோ! அந்தோ! அன்பைப்
பொழிகின்ற பார்வை எங்கே?
பூஞ்சிரிப் பெங்கே? மின்னும்
அழகிய உருவம் எங்கே?
அமைதியின் வடிவம் எங்கே?
மொழியுணர் வூட்டி வைத்த
"முரசொலிப் புதையல்" எங்கே?

தூண்டினார்! குற்றச் சாட்டு
சுமத்தினார்! சட்ட மன்றக்
கூண்டிலே ஏற்றி னார்!நீ
குறுநகை புரிந்து நின்றாய்!
தாண்டினாய் தடையை! அன்புத்
தலைவரை நெகிழ வைத்தாய்!
மூண்டதோர் எதிர்ப்பை யெல்லாம்
" முரசொலி"க் காக ஏற்றாய்!

நேர்எதிர் குணமாய், நீரும்
நெருப்புமாய் உடன்பி றந்தீர்!
நீரோடை தம்பி! கோப
நெருப்பன்றோ அண்ணன் மாறன்!
கூர்தீட்டும் அண்ணன் கோபம்!
குளிர்விக்கும் உன்றன் ஈரம்!
தூரம்நீ சென்றாய்! நெஞ்சில்
சுமைதாங்கி டாத பாரம்!

"கலைஞரின்" மறைவுக் குப்பின்
கண்ணீரைப் பொழிந்த வண்ணம்
தலையிலே அடித்துக் கொண்டு
"தளபதி" அழுத காட்சி
மலைகூட உருகும்! எங்கள்
மனம்என்ன ஆகும்? சோக
வலையிலே எம்மை வீழ்த்தி
வழியில்ஏன் பிரிந்தாய் ஐயா!

துளைத்ததே கொடிய செய்தி!
துடித்ததே இதயம் யாவும்!
வளைத்ததே துன்பம்! பொங்கி
வழியும்கண் ணீர்து டைத்தே
களத்தில்நீ விட்டுச் சென்ற
கடமையைத் தொடர்வோம்! எங்கள்
உளத்தில்நீ என்றும் வாழ்வாய்
உயிர்ப்பூவாய்!வணங்குகின்றோம்!

இலைமீது துளிகள் அல்ல!
ஏட்டில்நீ வடித்த சொற்கள்
மலைமீது கல்வெட் டைப்போல்
நிலையான வரலா றாகும்!
கலைமிளிர் எழில்மு கத்தைக்
கவின்மிகு புன்சி ரிப்பைச்
சிலையிலே ஒளிரக் கண்டு
தேற்றிக்கொள் வோம்!ம னத்தை!



**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**